**Starting time 11.44 A.M.**

**<u>IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No. 375/2013**

Deposition of **<u>P.W.1</u>** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. Janaki, Gr. III Bench Clerk of this court, on 01.07.2022 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : சின்னுசாமி | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>** நான் எங்கு குடியிருக்கிறேன் என்றால், கடம்பூர் கிராமம், அருந்ததியர் தெரு, கதவு எண் 245 வீட்டில் குடியிருக்கிறேன். என்னுடைய ஆதார் அட்டை, குடும்ப அட்டை மேற்படி விலாசத்தில்தான் உள்ளதா என்றால், அந்த விலாசத்தில் இல்லை, வேறுவிலாசத்தில் உள்ளது. மேற்படி கடம்பூர் கிராமம், அருந்ததியர் தெரு, கதவு எண் 245 வீட்டில் நான் எத்தனை ஆண்டு காலமாக குடியிருந்து வருகிறேன் என்றால், கணபதியிடமிருந்து நான் கிரயம் பெற்றபிறகு, சேதமாக இருந்த வீட்டை, சீர் அமைத்து குடியிருந்து வருகிறேன். எனது பெயர் சின்னுசாமி என்றால், சரிதான். எனது பெயர் சின்னு என்று சொல்வதற்கு எந்தவித ஆவணமும் இல்லை என்றால், சரிதான், கூப்பிட மட்டும்தான் சின்னு என்று அழைப்பார்கள், ஆவணங்களில் சின்னுசாமி என்றுள்ளது. நான் வா.சா.ஆ.2 கிரயப் பத்திரத்தின் மூலம் தாவா சொத்தை கணபதிக்கு கிரயம் செய்தபிறகு நான் ராசிபுரம் வட்டம், நாரைக்கிணறு கிராமத்தில்தான் குடியிருந்து வந்தேன் என்றால், சரிதான். அதன் பின் வா.சா.ஆ.1 ஆவணத்தின் மூலம் கணபதிக்கு கிரயம் செய்த சொத்தை மீண்டும் கிரயம்

பெற்றபிறகு நான் தாவா சொத்திற்கு குடியிருக்க வரவில்லை என்பதால்தான், எனது ஆதார் அட்டை, குடும்ப அட்டை உள்ளிட்டவைகள் ராசிபுரம் விலாசத்தில் உள்ளது என்றால், சரியல்ல, நான் 2013-ம் ஆண்டு கணபதியிடமிருந்து சொத்தை கிரயம் பெற்றபிறகு தாவா சொத்தில்தான் குடியிருந்து வருகிறேன். வா.சா.ஆ.1 கிரயப் பத்திரத்தில் எனது விலாசம் நாரைகிணறு கிராமம்தான் சொல்லப்பட்டுள்ளது என்றால், சரிதான். வா.சா.ஆ.1 கிரயப் பத்திரத்தில் உள்ள சொத்து விவரத்தில் வீடு இருப்பதாக சொல்லப்பட்டுள்ளதா என்றால், இல்லை, ஆனால் அப்போது வீடு முழுவதும் சேதாரமாகியிருந்ததால் வீட்டை காண்பிக்கவில்லை. அதேபோல் தாவா சொத்து விவரத்தில் உள்ள மின் இணைப்பு எண்ணையும், கதவு எண்ணையும் வா.சா.ஆ.1 கிரயப் பத்திரத்தில் சொல்லவில்லை என்றால், சரிதான். நான் கணபதிக்கு கிரயம் செய்து கொடுத்த வா.சா.ஆ.2 கிரயப் பத்திரத்தில் வீடு இருப்பதாக காட்டப்பட்டுள்ளதா என்றால், இல்லை. பிரதிவாதிகள் கடம்பூர் கிராமத்தில் எந்த தெருவில் குடியிருக்கிறார்கள் என்றும், கதவு எண் சொல்லவில்லை என்றால், சரிதான், ஆனால் தாவா சொத்து முதல் தெருவிலும், பிரதிவாதிகளின் வீடு இரண்டாவது தெருவிலும் உள்ளது. பிரதிவாதிகள் குடியிருக்கும் வீட்டிற்கு நான்கு எல்லைகள் என்னவென்றால், கிழக்கிலும், வடக்கிலும் வீதி உள்ளது, தெற்கில் முருகேசன் மற்றும் கந்தன் வீடும், மேற்கில் வீரம்மாள் வீடும் உள்ளது. பிரதிவாதிகள் வசிக்கும் வீட்டின் சர்வே எண், கதவு எண் தெரியுமா என்றால், தெரியாது. பிரதிவாதிகள் நான் சொன்ன மேற்படி செக்குபந்திக்குள் குடியிருப்பதாக சொல்வது தவறு என்றும், அவர்கள் தாவா சொத்தில்தான் குடியிருந்து வருகிறார் என்றால், சரியல்ல. தாவா சொத்து விவரத்திலுள்ள மின் இணைப்பினை எந்த தேதியில் வாங்கினேன் என்பதற்கான ஆவணத்தை நான் வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. நான் தாவா சொத்து விவரத்திலுள்ள வீட்டிலேயே குடியிருந்து வரவில்லை என்றால், சரியல்ல. தாவா சொத்து விவரத்திலுள்ள கதவு எண் 7/10 வீட்டிற்குத்தான் பிரதிவாதிகளின் வாக்காளர் அட்டை, அடையாள அட்டை உள்ளது என்றால், சரியல்ல. தாவா சொத்திற்கான பட்டா தாக்கல் செய்துள்ளேனா என்றால், தாக்கல் செய்துள்ளேன். கணபதியிடமிருந்து கிரயம் செய்ய கிரயப் பத்திரத்தின் அசல்

ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். எனது மனைவி பெயர் என்னவென்றால், செல்லம்மாள். கந்தாயி என்பவர் யார் என்றால், எனது அண்ணி ஆவார். கந்தாயி கணவரான எனது அண்ணன் உயிருடன் உள்ளாரா என்றால், காலமாகிவிட்டார். எனது அண்ணன் காலமான பிறகு கணபதியுடன் கந்தாயி உறவு முறையில் இருந்தார் என்றால், சரியல்ல. அதுபோல் கந்தாயி கணபதியுடன் உறவு முறையில் இருந்தார் என்றும், அதை பயன்படுத்திதான் பெயரளவில் கணபதியிடமிருந்து கிரயப் பத்திரம் எழுதி வாங்கிக் கொண்டேன் என்றால், சரியல்ல. வா.சா.ஆ.2 மூலம் 2006-ம் ஆண்டு நான் கணபதிக்கு தாவா சொத்தை கிரயம் செய்து கொடுத்த போதே அந்த சொத்தில் பிரதிவாதிகள்தான் குடியிருந்து வந்தார்கள் என்றும், அந்த சமயத்தில் கணபதி கொடுக்க வேண்டிய கிரயத் தொகையை பிரதிவாதிகள்தான் கொடுத்தார்கள் என்றால், சரியல்ல. 2006-ம் ஆண்டு பிரதிவாதிகள் பெயரில் தாவா சொத்தை கிரயம் பெறுவதற்கு குடும்ப அட்டை இல்லாத காரணத்தினால்தான் பெயரளவில் கணபதி பெயரில் கிரயம் செய்து கொடுக்கப்பட்டது என்றால், சரியல்ல. அந்த காரணத்தினால்தான் அசல் கிரயப் பத்திரமும், என் பெயரில் கொடுக்கப்பட்ட பட்டாவும் இன்று வரை பிரதிவாதிகள் வசமுள்ளது என்றால், சரியல்ல. அந்த காரணத்தினால்தான் பிரதிவாதிகள் அவர்களது பதிலுரையில் தாவா சொத்தில் அவர்கள் குடியிருந்து வருகிறார்கள் என்று குறிப்பிட்டுக்கூறியும், அதை மறுத்து மறுப்புரை தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல. தாவா சொத்தை நான் கிரயம் பெற்றபோது வீடு இடிந்த நிலையில் இருந்தது என்று தாவாவில் சொல்லியுள்ளது பொய்யானது என்றால், சரியல்ல. எனவே 04.10.2013 அன்று பிரதிவாதிகள் எனது அனுபவத்திற்கு இடையூறு செய்ததாக சொல்வது வழக்கிற்காக சொல்லும் பொய் என்றால், சரியல்ல. நான் தாவா சொத்தில் குடியிருக்கவில்லை என்றும், நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் பெயரளவில் ஏற்படுத்தியுள்ள ஆவணங்கள் என்றால், சரியல்ல. வா.சா.ஆ.1 கிரயப் பத்திரம் பெயரளவில் எழுதப்பட்டது என்றும், அது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால், சரியல்ல. தாவா சொத்தில் பிரதிவாதிகள்தான் குடியிருந்துவந்து வீட்டுவரியும், மின் கட்டணமும் செலுத்தி வருகிறார்கள் என்றால்,

சரியல்ல. எனவே நான் இவ்வழக்கில் கேட்டுள்ள பரிகாரங்கள் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால், சரியல்ல.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

வாதி தரப்பில் மறு விசாரணை இல்லை.

Ending Time : 12.20 P.M.

**ஒப்பம்/- ஜி. யுவராஜ்**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**